**திருமகள் போற்றிகள்**



அன்னதானம் அளிப்பவர்களின் இதயக் கமலத்திலே, எழிலே வடிவாக அன்பே நிறைவாக, அருளே குணமாகக் கொண்டு ஆசி புரிகிறாள். நாராயணனுக்கு துணையாக விளங்கும் மகாலட்சுமி இனிய சாந்தமான, மனநிறைவான, மகிழ்வான வாழ்க்கையை அன்பர்களுக்கு அளித்தருளுகிறாள். 16 (பதினாறு) வகை பேறுகளையும் {16 வகை செல்வங்கள் என்பது **நோயின்மை, கல்வி, தனம், தான்யம், அழகு, புகழ், பெருமை, இளமை, அறிவு, சந்தானம்** (பிள்ளைச் செல்வம்), **வலிமை, தன்னம்பிக்கை, நீண்ட ஆயுள், வெற்றி, நல்வினை, நுகர்ச்சி** (இப்பேறுகளை மனதாலும், உடலாலும், அனுபவிக்கும் பேறு) ஆகும்} ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் தந்து நிறைவான இவ்வுலக வாழ்வை வாழவும் துணை செய்கிறாள்.

நமது ஆலயத்தில் சுதை வடிவாக அமைக்கப்பட்டுள்ள மகாலட்சுமியின் திருவுருவத்தை அன்னையின் வழிகாட்டுதல் மூலமாக, மந்திர கோணங்கள், உச்சாடனங்கள் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

இவருடைய போற்றிகளை அன்னையே முறையாக எழுதியுள்ளார். இந்த போற்றி மந்திர அதிர்வுகள் மகாலட்சுமியின் சக்தியையே வழிபடும் இடத்தில் உருவாக்க வல்ல மகாசக்தி மிக்க அதிர்வுகளாகும். இப்போற்றிகளில் கூறப்பட்டுள்ள அனைத்து வகையான வளங்களும் இதனை வழிபடுவோரின் இல்லங்களில் நிறையக் காணலாம்.

ஒவ்வொரு நாளும் வீட்டில் மாலையில் விளக்கேற்றி மகாலட்சுமியின் திருவுருவத்தை அலங்கரித்து, எளிய பட்சணங்கள், பானங்கள், பழங்கள் இவற்றில் ஏதாவது ஒன்று சிறிது வைத்து, மனசுத்தியோடு தூப, தீப ஆராதனை காட்டி வேண்டி முடிக்கலாம். எல்லா நாட்களிலும் மாலை வேளை லட்சுமிக்குரிய காலம். வீட்டின் வாயிற்புறத்தை சுத்தமாக்கி, வாயிற்படியில் விளக்கேற்றி வைத்து, இல்லத்தில் வழிபடுவது சாலச் சிறந்தது.

**போற்றிகள்**

ஓம் அச்சுதன் மகிழ் அணங்கே போற்றி
ஓம் ஆதாரப் பொருளாய் இருப்பாய் போற்றி
ஓம் இம்மை வாழ்வை சிறக்கச் செய்வாய் போற்றி
ஓம் ஈட்டிய செல்வம் நிலைக்கச் செய்வாய் போற்றி
ஓம் உம்அருளால் உலகை செழிக்க வைப்பாய் போற்றி
ஓம் ஊற்றாக இல்லத்தில் வளம் பெருகச் செய்வாய் போற்றி
ஓம் எண்ணிய வண்ணம் இன்ப வாழ்வளிப்பாய் போற்றி
ஓம் ஏழுலக வளத்தின் ஆதாரமாக இருப்பாய் போற்றி
ஓம் ஐம்பொன்னே மாணிக்கமே அரங்கனின் துணையே போற்றி
ஓம் ஒன்பது கோள்களும் உம் அருளால் நல்லதே நல்கும் போற்றி 10

ஓம் ஓடிய செல்வம் மீட்டு பெருக்க வைப்பாய் போற்றி
ஓம் கதிரவன் கனல் எழில் ஒளி உருவே போற்றி
ஓம் கார்மேக வண்ணன் மாலோன் துணையே போற்றி
ஓம் சலனமிலா மோக எழில் வடிவே போற்றி
ஓம் சால எழிலுடன் கமலம் அமர்ந்த திருவே போற்றி
ஓம் மஞ்சள்வண்ண சொர்ணாம்பிகையே போற்றி
ஓம் ஞானம் உற்றோரையும், மற்றோரையும் சிறக்கச் செய்பவளே போற்றி

ஓம் கடல்மிசைத் துயிலும் பரந்தாமன் திருவே போற்றி
ஓம் சூடாமணியே சுந்தரவடிவே சுடர்ஒளியே போற்றி
ஓம் கனகமழை பொழிவித்த கனகவல்லியே போற்றி 20

ஓம் நவமணிகளும் நிறைவாய் தந்தருளும் நங்கையே போற்றி
ஓம் எண்ஈருவகைத் திருவாய் விரிந்து அருள்பவளே போற்றி
ஓம் உன்விழிபட்ட இடத்தில் வளம்செழிக்க வைப்பாய் போற்றி
ஓம் உம் திருவடி எம் இல்லத்தில் பதித்து அரசாள வேண்டும் தாயே போற்றி
ஓம் உம் அருள்வேண்டி உமைநாடி பணிகின்றோம் போற்றி
ஓம் திருவிளக்கில் ஒளியாய் நின்று மிளிர்கின்றாய் போற்றி
ஓம் மாதவன் இதயம் அமர்ந்த மகாலட்சுமி தேவியே போற்றி
ஓம் கண்ணிற்கு நிறைவாய் கோலஎழில் வடிவுடையாய் போற்றி
ஓம் மண்ணுலக சுகபோக வாழ்வு தந்தருளும் தேவியே போற்றி
ஓம் செங்கமல மலர் அமர்ந்த சிங்காரவல்லியே போற்றி 30

ஓம் நாதமும் வேதமும் புகழ் நாரணனின் மனமகிழ்வே போற்றி
ஓம் புனிதப் பொருள்களின் பொலிவே செந்தளிரே போற்றி
ஓம் தூய்மையுள் தூய்மையாய் விளங்கும் தூய்மையே போற்றி
ஓம் வெண்மையுள் வெண்மையாய் ஒளிரும் வெண்சுடரே போற்றி
ஓம் ஆண்டியையும் அரசனாக்கும் வன்மை உடையோய் போற்றி
ஓம் அண்டித் துதிப்போர் யாவரும் வளம்பெருக வைப்பாய் போற்றி
ஓம் கண்ணிற்கும் கருத்திற்கும் நிறைந்த சுகவாழ்வே போற்றி
ஓம் பாற்கடல் துயில்வோன் பக்கம் அமர்ந்தவளே போற்றி
ஓம் நால்வகை பக்தரும் தினமும் நாடும் செல்வியே போற்றி
ஓம் இந்திரபோகமே அரசவாழ்வே நிறைவளமே போற்றி 40

ஓம் ஆதி அந்தம் கடந்த திருமாலவன் துணையே போற்றி
ஓம் சந்திர பிம்பமாய் என்னுள் ஒளிரும் தவப்பேரே போற்றி
ஓம் குங்கும மங்கலமே ஒளி உமிழ் மாணிக்கமே போற்றி
ஓம் பசுமை வளமாய் பாரை விளங்கச் செய்வாய் போற்றி
ஓம் பாமரருக்கும் பரிவுடன் அருளும் மரகதவல்லியே போற்றி
ஓம் என்றும் இளமை பொலிவாய் திகழும் வைரமே போற்றி
ஓம் இதயம் தேடும் செல்வமே இன்ப வாழ்வே போற்றி
ஓம் அங்கமெல்லாம் சொர்ணமாய் திகழும் பவளவல்லியே போற்றி
ஓம் திங்களின் தாரையாய் நின்று தினம் வாழ்விப்பவளே போற்றி
ஓம் குறைவிலா செல்வம் கொழிக்கச் செய்வாய் போற்றி 50

ஓம் என்றென்றும் இளமையாய் இலங்கும் நல்முத்தே போற்றி
ஓம் பற்றற்ற முனிவரையம் நாடி உதவும் அருளே போற்றி
ஓம் பாங்குடன் பலவகை நலனும் அருளும் பரிமளமே போற்றி
ஓம் ஆன்றோர் பக்கமிருக்கும் அமுதே புஷ்பராகமே போற்றி
ஓம் மதிப்போர் தம்மை நாளும் நீங்காதிருப்பாய் போற்றி
ஓம் ஆதவன் ஒளியே அருள்பொலிவே அன்னமே போற்றி
ஓம் தூய நற்பலன்களின் விளைவைத் தரும் மருந்தே போற்றி
ஓம் அனைத்து கலைகளின் பலனாய் தோன்றும் செல்வமே போற்றி
ஓம் குன்றாத வளமையே அற்புதக்கொடையே போற்றி
ஓம் செம்மை மனமுடையோர் மனையில் சிறப்பாய் விளங்குவாய் போற்றி 60

ஓம் நற்றவப் பலனே நன்றான வைடூரியமே போற்றி

ஓம் ஞானவாழ்வளிக்கும் ஆதாரமே அற்புத கோமேதகமே போற்றி
ஓம் கீதமும் நாதமும் மயங்கும் இசையே புஷ்பராகமே போற்றி
ஓம் திருமகளே தேவியே தெய்வீக ஒளிவடிவே போற்றி
ஓம் தயாபரியே குணசுந்தரியே தளிர்வடிவே போற்றி
ஓம் சிற்ப எழில் மேனியே சிந்தைநிறைந்த செங்கதிரே போற்றி
ஓம் அற்புதவடிவே அமரரும் போற்றும் அணங்கே போற்றி
ஓம் வேண்டுதல் புரிவோர் விரும்பும் வண்ணம் வந்தருள்வாய் போற்றி
ஓம் தேடுவோர்க்கு தேடியவண்ணம் கிடைக்கச் செய்வாய் போற்றி
ஓம் கண்பட்ட இடமெல்லாம் பெரும் செல்வமாக்கும் தாயே போற்றி 70

ஓம் புனித திருவடியால் மண்ணும் பொன்னாக்கும் திருவே போற்றி
ஓம் நால்வகை சேனையும் நல்லரசும் உம் விருப்ப விளைவே போற்றி
ஓம் நற்சுவை நீரே இனிய கன்னலே போற்றி
ஓம் நற்சுவைப் பாலே முக்கனிச் சுவையே போற்றி
ஓம் குளிர் தரும் சுகமே கொண்டல் பொழியும் மாரியே போற்றி
ஓம் வண்ண ஓவிய வடிவாய் திகழும் பொலிவே போற்றி
ஓம் நல்லருள் பொழியும் நற்சிந்தை இருப்பாய் போற்றி
ஓம் நந்தா ஒளியாய் நாளும் ஓங்கும் நல் அருளே போற்றி
ஓம் பட்டும் பகட்டும் பாரினில் ஏற்றமும் தருவாய் போற்றி
ஓம் நீடித்த செல்வம் நிலைக்கச் செய்யும் பேரருளே போற்றி 80

ஓம் நாடிவந்து வேண்டுவோர் தமக்கு அருள்வாய் போற்றி
ஓம் மாசிலாமணியே மருவிலா ஒளியே போற்றி
ஓம் காசினியின் நல்வளமே கற்பகத்தருவே போற்றி
ஓம் காமதேனுவே கரையில்லா அருள் உள்ளமே போற்றி
ஓம் சர்வலோக புனிதமே சர்வபாக்கியமே போற்றி
ஓம் பற்றற்றவரும் போற்றி வணங்கும் பரிமளவல்லியே போற்றி
ஓம் மஞ்சுவண்ண மாயவனின் மனமிருப்பே போற்றி
ஓம் நவமணிகளும் கனகஅணிகளும் அளிப்பாய் போற்றி
ஓம் அன்னமும் சொர்ணமும் அளிக்கும் ஐஸ்வர்யமே போற்றி
ஓம் கதியொன்றிலா வறியவர்க்கும் கதிகாட்டும் பாதையே போற்றி 90

ஓம் முப்பொழுதும் எப்பொழுதும் துணையிருந்து அருள்வாய் போற்றி
ஓம் அண்ட சராசரங்களின் பேரழகே போற்றி
ஓம் அட்ட கோணங்களில் அமர்ந்தாளும் அரசியே போற்றி
ஓம் இயற்கையின் வளங்களில் இனிதே இருப்பாய் போற்றி
ஓம் மங்கையர்க்கு மங்கலப் பொருளாய் விளங்குவாய் போற்றி
ஓம் மங்கலக்குறிகளும் மங்காதசெல்வமும் நிறைவாய் போற்றி
ஓம் தங்கியே நாளும் இல்லத்தில் ஆட்சிபுரிவாய் போற்றி
ஓம் மனதின் மகிழ்வுக்கு ஆதாரமாய் நிற்பாய் போற்றி
ஓம் எங்கள் மனையில் என்றும் இருந்திட வருவாய் போற்றி
ஓம் மஞ்சளும் குங்குமமும் அளித்து காத்திட வருவாய் போற்றி100

ஓம் சொர்ணலட்சுமியாய் நீயும் சுகம்தர வருவாய் போற்றி
ஓம் அன்னலட்சுமியாய் நாளும் அமுதளிக்க வருவாய் போற்றி
ஓம் சந்தானலட்சுமியாய் சகலபாக்கியமும் அளிக்க வருவாய் போற்றி
ஓம் வீரலட்சுமியாய் துயர்துடைக்க விரைந்து வருவாய் போற்றி
ஓம் மகாலட்சுமியாய் மாதவப்பயனாய் இல்லம் செழிக்க வருவாய் போற்றி
ஓம் மறைபுகழ் மாதவனுடன் மணி ஒளிதாயே நீயும் வருவாய் போற்றி

ஓம்  அஷ்டலட்சுமியாய் அனுதினமும் காத்திட வருவாய்  போற்றி
ஓம்  மறவாது எமைக்காக்க மனமகிழ்ந்து உடனே வருவாய் போற்றி108

ஓம் மகாலட்சுமி தேவியே நமோ நமஹ